ஈழநாடு
வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Eelanadu
07.09.2020 திங்கட்கிழமை

## 12 சரத்துகளை தவிர ஏனையவை புதிய அரசமைப்பிலிருந்து 'அவுட்'

கொழும்பு, செப். 07

இலங்கையில் தற்போது நடை முறையிலுள்ள அரசமைப்பில் 12 அத்தியாயங்களில் உள்ள சரத்துகளைத் தவிர ஏனைய அனைத்து விடயங்களும் புதிய அரசமைப்பின் ஊடாக மாற்றியமைக்கப்படவுள்ளன எனத் தெரியவருகின்றது.

புதிய அரசமைப்பை இயற்றுவதற்காக நியமிக்கப்பட்டுள்ள நிபுணர் குழு உறுப்பினர் ஒருவரை மேற்கோள்காட்டிசிங்கள வார இதழான மௌபிம் இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

இதன்படி பௌத்த மதம், தேசிய கீதம், தேசியக்கொடி

02

# சர்வாதிகார ஆட்சிக்கான அடிக்கல்தான் '20' திருத்தம்!

## மங்கள சமரவீர கடும் விமர்சனம்



கொழும்பு, செப் 07

2020 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கு முன்னர் அரசமைப்புச் சட்டத்தில் உள்ள பாதிப்பான விடயங்களை நீக்குவதாக மக்களுக்குக் கூறிய தற்போதைய அரசு, அதற்கு பதிலாக மக்களின் சுதந்திரம், மனித உரிமை மற்றும் சட்ட உரிமையை நீக்கிவிட்டு, ஒரு நபரை கேந்திரமாகக் கொண்ட தன்னிச்சையான அதிகாரத்துக்கு அடிக்கல் நாட்டும் புதிய அரசமைப்புத் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்துள்ளது என முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர காட்டமாகக் கருத்து வெளியிட்டுள்ளார்.

02



## தீப்பற்றி எரிந்த கப்பலுக்கு வெளிநாட்டு நிபுணர் குழு!

அம்பாறை, செப் 07

அம்பாறை- சங்கமன்கண்டி கடற்பரப்பில் தீப்பிற்றிய நியூ டயமன்ட் கப்பல் தொடர்பாக ஆய்வு செய்வதற்காக இலங்கை வந்துள்ள வெளிநாட்டு நிபுணர் குழுவினர் கல்முனையில் இருந்து புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

பிரிட்டன் மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளை சேர்ந்த விசேட நிபுணர்கள் நேற்றுக் காலை இலங்கைக்கு வந்த நிலையில், கல்முனைக்கு சென்றுள்ள அவர்கள் நேற்று மாலை கடற்படைப் படகு மூலம் தீப்பற்றிய கப்பலுக்குப் புறப்பட்டுச்

02

## தர்மபுரம் பிரதேசத்தில் கசிப்புக்குகை முற்றுகை

கிளிநொச்சி, செப். 07

கிளிநொச்சி தர்மபுர பகுதியில் கசிப்பு குகை ஒன்று முற்றுகை யிடப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தரும்புரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கிங்ஸிலி ஹேரத்தலைமையில் கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பெரியகுளம் தரும்புர பொலிஸார் மற்றும் கிளிநொச்சி சிறப்பு அதிரடிப்படையினர்

02

## '20' திருத்தம் குறித்து கூட்டமைப்பு செவ்வாய் கூடி தீர்க்கமான முடிவு

### கூட்டமைப்பின் தலைவர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், செப் 07

ஜனநாயகத்துகு சாவுமணியடிக்கும் முன்மொழிவுகளைக் கொண்டுள்ள 20 ஆவது திருத்தம் தொடர்பில் கூட்டமைப்பு எவ்விதமான நடவடிக்கைகளை முன்னெடுப்பது என்பது குறித்து பாராளுமன்றக் குழுவில் தீர்க்கமான முடிவுவொன்றை எடுக்கவுள்ளோம். அநேகமாக நாளை செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றக் குழு கூடவுள்ளது என அதன் தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற

02

### 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு

## சீனாவின் கொவிட் – 19 தடுப்பூசியின் மூன்றாம் கட்ட பரிசோதனை விரைவில்

பீஜிங், செப்.07

சீனாவினால் ஆய்வு செய்யப்பட்டு வரும் கொரோனா வைரஸ் (கொவிட்- 19) தடுப்பூசியின் மூன்றாவது கட்ட பரிசோதனைக்காக பல நாடுகளைச் சேர்ந்த 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பயன்படுத்தப்படவுள்ளனர்.

சீன தேசிய உயிரியல் குழு இதனைத் தெரிவித்துள்ளது.

02

## வாக்குறுதிகளை காற்றில் விட்டால் முழு உலகமுமே அரசை எதிர்க்கும்!



### எச்சரிக்கிறார் சுமந்திரன் எம்.பி.

கிளிநொச்சி, செப்.07

பிராந்திய வல்லரசுக்கும், முழு சர்வதேசத்துக்கும் மூன்று தடவை கொடுத்த வாக்குறுதிகளை இலங்கை அரசு காற்றில் பறக்கவிடுமாக இருந்தால், அதுதான் இலங்கை என்ற நாடு விடுகின்ற மாபெரும் தவறாக இருக்குமெனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் அந்தக் கட்சியின் ஊடகப்

02

## '20' ஐ எதிர்த்து நிற்பதற்கு ரணிலே பொருத்தமானவர்

### அர்ஜூன ரணதுங்க கூறுகிறார்



கொழும்பு, செப்.07

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் ஆசனத்திற்கு கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே பொருத்தமானவர் என முன்னாள் அமைச்சர் அர்ஜூன ரணதுங்க ஆதரவு வெளியிட்டுள்

02

## 5 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு, செப் 07

கொழும்பு, காலி, களுத்துறை, கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

## மோ. சைக்கிள்கள் மோதி விபத்து முன்னாள் ஆசிரிய ஆலோசகர் சாவு

### கோப்பாயில் நேற்று பிற்பகல் சம்பவம்

யாழ்ப்பாணம், செப் 07

கோப்பாய் பூதர்மடம் பகுதியில் மோட்டார் சைக்கிள்கள் மோதி இடம்பெற்ற விபத்தில் ஓய்வுபெற்ற ஆசிரியர் ஆலோசகர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.45 மணியளவில் இடம்பெற்றது.

02

## இந்தியா தலையிட்டாலும் '13','19' நிச்சயமாக 'அவுட்'

### அடித்துச் சொல்கிறார் அமைச்சர் விமல்



கொழும்பு, செப். 06

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டமும் 19ஆவது திருத்தச் சட்டமும் நாட்டுக்குச் சாபக்கேடாக அமைந்துள்ளன. இரண்டுக்கும் புதிய அரசமைப்பில் முடிவு காணப்படும். 20 ஆவது திருத்தச் சட்டமூலம் தற்காலிக ஏற்பாடேயாகும்.

02

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## வாக்குறுதிகளை...

பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் எச்சரித்துள்ளார்.

இந்தப் பிழையினூடாக தமிழர்களின் எதிர்ப்பை மாத்திரமல்லாது, முற்போக்கு சிந்தனையாளர்களாக இருக்கும் சிங்கள மக்களினுடைய எதிர்ப்பை மாத்திரமல்லாது, முழு உலகத்தினுடைய எதிர்ப்பையும் எதிர்கொள்ள நேரிடும் என்றும் அவர் கூறினார்.

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு எச்சரித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஓர் ஜனநாயகப் புரட்சி ஊடாக நாட்டிலே அரசியலை மாற்றி அதன்மூலம் வந்த 19 ஆவது திருத்தத்தை தூக்கி குப்பைத் தொட்டியில் போடுகின்ற நிகழ்ச்சி ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டது.

வருகின்ற நாட்களில் அது முழுமையாக நிறைவேறப்போகின்றது.

நாடு சர்வாதிகாரத்தை நோக்கிப் போகின்றது என இன்று பலர் குரல் கொடுக்கின்றார்கள். இந்த அரசை ஆதரித்தவர்கள்கூட இன்று அதற்கு எதிராகக் குரல் கொடுக்கத் தொடங்கியிருக்கின்றார்கள். இந்நிலையில் ஜனநாயகத்துக்கு விரோதமான இந்த விடயத்தை நாங்கள் எதிர்ப்போம்.

தமிழ் மக்களின் இனப் பிரச்னைக்கான தீர்வு மேலும் தள்ளிப்போவதற்கான சூழ்நிலை தென்படுகின்றது. ஆனால், அப்படியான சங்கடங்கள் ஏற்படுகின்ற வேளைகளில்தான் தீர்வுகளும் வரும்.

13 ஆம் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவேன், அதற்கும் அப்பால் சென்று அதிகாரப் பரவலாக்கலை அர்த்தமுள்ளதாக ஆக்குவேன் என்று சொல்லியிருக்கின்றார். இதனடிப்படையில் தற்போது இருக்கின்ற முறைமையானது ஓர் அர்த்தமில்லாத முறைமை என்பதை ஏற்றுக்கொள்கின்றார்கள்.

அதை அர்த்தமுள்ளதாக மாற்றுவோம் எனவும் உறுதி கொடுத்துள்ளார்கள். ஆட்சி அதிகாரங்கள் பகிரப்படுகின்ற போது அது மக்களினால் தெரிவு செய்யப்படுகின்ற பிரதிநிதிகளிடம் கொடுக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் அது மக்களுக்கு கொடுக்கப்படுகின்ற ஆட்சி அதிகாரங்களாக இருக்கும். மாறாக மத்திய அரசிலே ஒரு அமைச்சர், மூன்று அரை அமைச்சர்கள் என தனிப்பட்ட ரீதியிலே அவர்களுக்கு பதவிகளைக் கொடுப்பது மக்களுக்குக் கொடுக்கின்ற ஆட்சிப் பகிர்வு அல்ல.

இப்பொழுது இருக்கின்ற மாகாண சபை முறைமையிலே ஆட்சி அதிகாரங்கள் பகிரப்பட்டதாக சொல்லப்பட்டாலும் கூட அது இல்லை. சட்டமாக்கல் அதிகாரம் மாகாண சபைக்குக் கொடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்ற போதிலும், எந்தச் சட்டத்திற்கும் அனுமதி கொடுக்க வேண்டிய தேவைப்பாடு இருக்கின்றது.

அந்த அனுமதியைக் கொடுப்பது ஆளுநரே. ஆளுநர் அனுமதி கொடுத்தால்தான் அது அந்த மாகாணத்தில் சட்டமாகும். சட்டவாக்கல் சபை அதனை நிறைவேற்றினாலும்கூட ஜனாதிபதியின் நேரடி பிரதிநிதியாக இருக்கின்ற ஆளுநர் கைச்சாத்திடாமல் அது சட்டமாகாது. ஆகவே சட்டவாக்க அதிகாரம் மக்கள் பிரதிநிதிகளிடம் முழுமையாக கொடுக்கப்படவில்லை.

அதேவேளை, நிறைவேற்று அதிகாரமும் ஆளுநரின் கைகளிலேயே உள்ளது. அமைச்சர் வாரியத்தினுடைய அனுமதியுடன் அவர் செயற்பட வேண்டும் என்று அரசமைப்பிலே கூறியிருந்தாலும்கூட, மாகாண சபைகள் சட்டம் என்ற சட்டத்தின்படி அந்த அதிகாரங்களை ஆளுநர் நேரடியாகவே உபயோகிக்கின்றார்.

ஆகையினாலே, நிறைவேற்று அதிகாரம்கூட அதிகாரப் பகிர்வு என்பதற்கு உட்படுத்தப்படாமல் மத்திய அரசின் பிரதிநிதியான ஆளுநரின் கைளிலே தொடர்ச்சியாக இருக்கின்றது.

எனவே, சர்வதேசத்திற்கு கொடுக்கின்ற வாக்குறுதிகளை இங்கே வாழ்கின்ற எமக்குக் கொடுக்கின்ற வாக்குறுதிகளைப்போல தட்டிக்கழிக்க முடியாது. இந்தியாவுக்கு எவ்வாறு மூன்று தடவைகள் எழுத்திலே வாக்குறுதி கொடுத்தார்களோ அதேபோன்று முழு சர்வதேசத்துக்கும் இலங்கை அரசு மூன்று தடவைகள் எழுத்திலே வாக்குறுதி கொடுத்திருக்கின்றது.

அந்த வாக்குறுதிகளிலும்கூட கூடுதலான அதிகாரப் பகிர்வின் ஊடாக ஓர் புதிய அரசியலமைப்பை உருவாக்குவதன் மூலம் மீள நிகழாமைக்கான உத்தரவாதத்தை கொடுக்கின்றோம் என சொல்லியிருக்கின்றார்கள். நிலைமாறுகால நீதியிலே நான்காவது தூணாகச் சொல்லப்படுவது இந்த மீண்டும் நிகழாமைக்கான உத்தரவாதமாகும்.

ஓர் புதிய அரசியலமைப்பின் ஊடாகவே இந்த மீள்நிகழாமைக்கான உத்தரவாதத்தை வழங்குவதாக இலங்கை அரசு உத்தரவாதம் அளித்துள்ளது. அதிகாரப் பகிர்வை மேலும் அதிகரிப்பதன் ஊடாக அதனை உறுதிப்படுத்துவதாக அவர்கள் வாக்குறுதி கொடுத்திருக்கின்றார்கள்.

ஆகையினாலே, இன்றைக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை இந்த நாட்டிலே அவர்கள் பெற்றிருக்கின்ற ஒரே காரணத்திற்காக பிராந்திய வல்லரசுக்கு மூன்று தடவை கொடுத்த வாக்குறுதியையும், முழு சர்வதேசத்துக்கும் மூன்று தடவை கொடுத்த வாக்குறுதியையும் காற்றிலே இலங்கை அரசு பறக்கவிடுமாக இருந்தால் அதுதான் இலங்கை என்கின்ற நாடு விடுகின்ற மாபெரும் தவறாக இருக்கும்-என்றார்.

## '20' ஐ எதிர்த்து...

ளார்.

இதேவேளை, உத்தேச 20 ஆவது திருத்தத்திற்கு எதிராக பாராளுமன்றத்தில் குரல் கொடுப்பதற்கு முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே மிகவும் பொருத்தமானவர் என்றும் அவர் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் 74 ஆவது சம்மேளனம் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று சிறிகொத்தாவில் இடம்பெற்றது.

உத்தேச 20 ஆவது திருத்தத்தினால் நாட்டுக்கு எதிர்மறையான பாதிப்பு ஏற்படும் எனவும் 20 ஆவது திருத்தம் குறித்து மக்களும் அரசும் அறிய வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த விடயங்கள் குறித்து பாராளுமன்றத்தில் உரையாற்றுவதற்கு ரணில் விக்கிரமசிங்கவே மிகவும் பொருத்தமானவர் என்றும் அர்ஜூன ரணதுங்க சுட்டிக்காட்டினார்.

## 12 சரத்துக்களை...

மற்றும் நாட்டின் ஒருமைப்பாடு ஆகியவற்றில் தாக்கம் செலுத்தக்கூடிய 12 சரத்துகளில் எவ் வித மாற்றமும் வராது எனவும், ஏனைய சரத்துகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கோ அல்லது நீக்குவதற்கோ நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மைப் பலம் போதும் என்பதால் சர்வஜன வாக்கெடுப்பை நடத்தவேண்டிய தேவை ஏற்படாது எனவும் அந்த நிபுணர் குறிப்பிட்டார் என அந்தச் செய்தி யில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனை 21ஆவது திருத்தச் சட்டமாகக்கருதாமல் புதிய அரசமைப்பாகவே அடையாளப்படுத்த முடியும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனினும், சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதா அல்லது இல்லையா என்பது தொடர்பில் நிபுணர் குழுக் கூட்டத்தில் விரிவாகக் கலந்துரையாடவுள்ளது.

புதிய அரசமைப்பை எதிர்வரும் டிசம்பர் மாதத்துக்குள் இயற்ற முடியும் எனவும், அதனை 2021 ஜனவரியில் அரசிடம் கையளிக்கக் கூடியதாக இருக்கும் என எதிர்ப்பார்ப்பதாகவும் குறித்த நிபுணர் கருத்து வெளியிட்டுள்ளார். அத்துடன், பல்துறையினரிடமும் புதிய அரசமைப்பு குறித்து கருத்துக்கள், ஆலோசனைகள் உள்வாங்கப்படவுள்ளன.

## '20' திருத்தம்...

உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

20ஆவது திருத்தச்சட்ட வரைவு வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. அதில் உள்ள விடயங்கள் தொடர்பில் நாம் ஆழ்ந்த கரிசனை கொண்டிருக்கின்றோம். குறிப்பாக ஜனநாயகத்துக்கு சாவுமணி அடிக்கும் வகையிலான விடயங்கள் தொடர்பில் நாம் அதீத கவனம் செலுத்தியுள்ளோம்.

எனவே இந்த விடயத்தை நாம் பக்குவமாகக் கையாளவேண்டியுள்ளது. ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் அதேநேரம், எமது மக்களின் பிரச்னைகளுக்கான தீர்வு தொடர்பிலும் கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

ஆகவே 20ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் எமது தீர்க்கமான முடிவுகளை எடுப்பதற்காக பாராளுமன்றக்குழு கூடவுள்ளது. எதிர்வரும் 8ஆம் திகதி பாராளுமன்ற அமர்வு இடம்பெறவுள்ள நிலையில் எமது உறுப்பினர்கள் அனைவரும் சமூகம் தரவுள்ளனர்.

அதன்போது நாம் இந்தக் கருமம் தொடர்பில் கவனம் செலுத்தி முடிவுகளை எடுக்கவுள்ளோம். பெரும்பாலும் நாளை செவ்வாய்க்கிழமை எமது பாராளுமன்றக் குழு கூடுவதற்கு வாய்ப்புக்கள் அதிகமாகவுள்ளன.

இதேவேளை, இந்த விடயம் சம்பந்தமாக நாம் ஏனைய அரசியல் கட்சிகளுடனும், தலைவர்களுடனும் கலந்துரையாடவுள்ளோம். இந்த விடயத்தில் அவர்களுடன் இணைந்து பணியாற்றுவது தொடர்பில் ஆராயாவுள்ளோம்- என்றார்.

## தீப்பற்றி...

சென்றுள்ளனர்.

இதேவேளை, கப்பலில் இருந்து எண்ணைக் கசிவு ஏற்பட்டால் அதனைத் தடுக்கும் வகையில் இந்திய கடற்பாதுகாப்புத் திணைக்களத்தின் 20 பொறியியலாளர்கள் அந்தப் பகுதிக்கு சென்றுள்ளனர்.

## சீனாவின்...

பஹ்ரேன், ஐக்கிய அரபு இராச்சியம், மொரோகோ, பெரு, ஆர்ஜென்டீனா ஆகிய நாடுகளில் ஏற்கனவே அந்தப் பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், சீனாவின் கொவிட்- 19 தடுப்பூசியின் மூன்றாம் கட்ட பரிசோதனை உஸ்பெகிஸ்தான் மற்றும் பாகிஸ்தானிலும் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதேவேளை, ரஷ்யாவினால் உருவாக்கப்பட்டுள்ள கொவிட் - 19 தடுப்பூசி வைரஸூக்கு எதிராக நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதில் சிறந்த பெறுபேறுகளை காட்டியுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சர்வாதிகார...

ஜே.ஆர். ஜயவர்தனவின் அரசமைப்புச் சட்டம் ஏகாதிபத்திய வாதச் சட்டம் எனக் கூறி எதிர்த்த மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்டோரே ஒரு குடும்பத்தின் அதிகாரத்தை உறுதிப்படுத்துவதற்காக மீண்டும் ஒரு முறை சர்வாதிகாரி ஆட்சியைக் கொண்டு வரும் அரசமைப்புத் திருத்தச் சட்டத்தை முன்வைத்துள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து மங்கள அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் தெரிவிக்கையில்-

நாட்டை அபிவிருத்தி செய்து மக்களுக்கு பிரதிபலன்களை பெற்றுக்கொடுப்பது இந்த அரசமைப்புத் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வரக் காரணமல்ல. சர்வாதிகாரியை உருவாக்கவேண்டும் என்ற நோக்கத்தில் இந்த அரசமைப்புத் திருத்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது.

புதிய அரசமைப்புத் திருத்தச் சட்டத்தின் மூலம் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலில் தெரிவாகும் நாட்டின் இரட்டை மக்கள் ஆணையில் தெரிவாகும் நாடாளுமன்றம் மாத்திரமல்ல, நீதித்துறையும் தரம் தாழ்த்தப்படும் என்பது அச்சுறுத்தலுக்கு உள்ளாகும்.

நீதிச் சேவைகள் ஆணைக்குழு உட்பட சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமிப்பது மாத்திரமல்ல, நீக்கும் அதிகாரத்தையும் ஜனாதிபதி தன்வசப்படுத்தியுள்ளார்.

தம்மை நீக்கும் அதிகாரத்தை ஜனாதிபதி கொண்டுள்ளதால், நீதி சேவைகள் ஆணைக்குழு, தேர்தல் ஆணைக்குழு ஆகியவற்றின் உறுப்பினர்கள், நாடாளுமன்றச் செயலாளர் உட்பட சுயாதீன ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் ஜனாதிபதியை திருப்திப்படுத்த நேரிடும்.

இப்படியான நிறுவனங்களில் மக்கள் எதிர்பார்க்கும் சுயாதீனம், நீதி, நியாயம் எதுவும் எந்த வகையிலும் மக்களுக்கு கிடைக்கப் போவதில்லை.

இவ்வாறு அனைத்து நிர்வாக அதிகாரங்களை ஒரு நபரின் ஊடாக குடும்பத்தை மையப்படுத்தி முன்னெடுத்துச் செல்லும்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் இருந்து ஏற்படும் எதிர்ப்பைச் சமாளிக்கக் கூடிய வகையில் அமைச்சரவை எண்ணிக்கை தொடர்பாக இதுவரை இருந்து வந்த வரையறை நீக்கப்பட்டு, நினைத்தாற்போல் அமைச்சர்களை நியமிக்கும் அதிகாரத்தையும் ஜனாதிபதி பெற்றுக்கொண்டுள்ளார்- என்று கூறியுள்ளார்.

## தர்மபுரம்...

இணைந்து இன்று அதிகாலை 1.30 மணியளவில் இந்த சுற்றிவளைப்பை நடத்தினர்.

சட்டவிரோத செயற்பாடுகளை ஒழிக்கும் நடவடிக்கை நேற்று முன்தினம் முதல் இடம்பெற்றுவருவதாகவும், இரண்டாவது நாளான நேற்று கட்டைக்காடு பகுதியில் சட்டவிரோத மதுபான உற்பத்தியிலீடுபட்ட இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் கூறப்பட்டது.

அத்துடன் அவர்களிடமிருந்து 176 லீற்றர் கசிப்பும் 1190 லீற்றர் கோடாவும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தும் உபகரணங்கள் 7 என்ப னவும் கைப்பற்றப்பட்டன. கைது செய்யப்பட்டவர்கள் தருமபுரபொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுவரு கின்றனர் என தரும்புர பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கிங்ஸிலி ஹேரர் தெரிவித்தார்.

## மோ. சைக்கிள்கள்...

சம்பவத்தில் அல்வாயைச் சேர்ந்த மகாலிங்கம் வின்சன் கோமகன் (வயது-63) என்ற வடமராட்சி வலயக் கல்வி அலுவலக முன்னாள் சேவைக்கால ஆசிரியர் ஆலோசகரே உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிள்கள் இரண்டு மோதுண்டதில் இந்த விபத்து இடம் பெற்றது என்று கோப்பாய் பொலிஸார் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

சம்பவத்தில் மோட்டார் சைக்கிளிலில் பயணித்த மகாலிங்கம் வின்சன் கோமகன் உயிரிழந்ததுடன், கச்சேரி - நல்லூர் வீதியைச் சேர்ந்த மற்றைய மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

உடற்கூற்றுப் பரிசோதனையின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## இந்தியா...

- இவ்வாறு அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை சிறப்புத் தூதுவர் மூலம் கையாள இந்தியா முயற்சிக்கின்றது என வெளிவந்த செய்தி தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புதிய அரசமைப்பில் 13ஆவது திருத்தத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்றே நம்புகின்றோம். இதில் நாம் உறுதியான நிலைப்பாட்டில் இருக்கின்றோம். இதில் இந்தியா தலையிடுவதால் எந்தப் பயனும் இல்லை.

இந்த நாட்டில் இனப்பிரச்னை தொடர 13ஆவது திருத்தமும் ஒரு காரணமாக இருக்கின்றது.

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டமும் 19ஆவது திருத்தச் சட்டமும் நாட்டுக்குச் சாபக்கேடாக அமைந்துள்ளன. இரண்டுக்கும் புதிய அரசமைப்பில் முடிவு காணப்படும்.

நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ள அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டமூலம் தற்காலிக ஏற்பாடே. அதன் பின்னர் வரவுள்ள புதிய அரசமைப்பு ஆபத்தான திருத்தங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும்.

எனவே, புதிய அரசமைப்பில் இந்தியா விரும்பும் 13ஆவது திருத்தத்தின் பரிந்துரைகளை உட்புகுத்த அரசு நடவடிக்கை எடுக்கவேமாட்டாது - என்றார்.

ஈழநாடு
Eelanadu
07.09.2020 திங்கட்கிழமை
சார்வரி, ஆவணி 21

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

gmail:- eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 492 7805

## மோடிக்காக காத்திருக்கும் கூட்டமைப்பு

13ஆவது திருத்தச்சட்டத்தை இல்லாமலாக்க வேண்டுமென்னும் கோரிக்கைகள் வலுத்துவருகின்றன. அரசாங்கம் இதில் எத்தகைய நிலைப்பாட்டை கொண்டிருக்கின்றது என்பது தொடர்பில் இதுவரை எந்தவொரு உத்தியோகபூர்வமான கருத்துக்களும் வெளியாகவில்லை. ஆனால் அரசாங்கத்தின் ஆதரவு சக்திகள் மத்தியிலிருந்து, 13ஆவது திருத்தச்சட்டத்திற்கு எதிரான கருத்துக்கள் தொடர்சியாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. அரசாங்கம் இது தொடர்பில் உத்தியோகபூர்வமாக எதனையும் கூறாவிட்டாலும் கூட, மாகாண சபை விவகாரங்களுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டிருக்கும் அட்மிரல் சரத்வீரசேகர மாகாண சபை முறைமைக்கு எதிராக தொடர்ச்சியாக கருத்துக்களை தெரிவித்து வருகின்றார். உண்மையிலேயே அரசாங்கத்திற்கு 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் கரிசனை இருந்திருக்குமாயின் மாகாண சபை முறைமையை எதிர்க்கும் ஒருவரை எதற்காக அமைச்சராக நியமிக்க வேண்டுமென்னும் கேள்வியில் நியாயமிருக்கின்றது.

13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் இந்திய பிரதமர் நரேந்திர மோடியை சந்திப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சிகளை மேற்கொண்டிருப்பதாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன. உண்மையில் இவ்வாறானதொரு முயற்சியை கூட்டமைப்பு எப்போதோ செய்திருக்க வேண்டும். ஆனால் கூட்டமைப்பு காலம் கடந்தே இது தொடர்பில் பேச முற்படுகின்றது. கடந்த ஐந்து வருடங்களாக இந்தியாவின் உதவியில்லாமலேயே அரசியல் தீர்வு ஒன்றை கொண்டுவரமுடியுமென்றே கூட்டமைப்பு நம்பியிருந்தது. அந்த அடிப்படையிலேயே ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து புதியதொரு அரசியல் யாப்பை கொண்டுவர முடியுமென்று நம்பி, கடந்த ஐந்து வருடங்களை வீணாக்கியது. ரணில்-மைத்திரி அரசாங்கம் தோற்றுப் போன இடத்திலிருந்தே, புதியதொரு அரசியல் யாப்பு தொடர்பில் கோட்டா - மஹிந்த அரசாங்கம் புதிய முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வருகின்றது. தற்போதைய நிலையில் இந்த அரசாங்கத்தால் தாங்கள் நினைக்கும் எந்தவொரு விடயத்தையும் தடையின்றி கொண்டுவர முடியுமென்று கருதுகின்ற சூழலிலேயே புதியதொரு அரசியல் யாப்பிற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

13ஆவது திருத்தச்சட்டம் என்பது இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் ஒரு அங்கம். இது தொடர்பில் தெற்கின் கடும்போக்குவாத சிங்கள தேசியவாத தரப்புக்கள் தொடர்ச்சியாகவே எதிர்ப்பை வெளியிட்டு வந்திருக்கின்றனர். ஆனால் அவ்வாறானவர்கள் அனைவரும் தற்போது தங்களுக்கான சந்தர்ப்பம் வாய்த்திருப்பதாகவே கருதுகின்றனர். அந்த அடிப்படையிலேயே இந்த விடயத்தை கையில் எடுத்திருக்கின்றனர். ஆனால் கூட்டமைப்போ கடந்த ஒரு தசாப்த காலத்தில் எங்குமே, 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு கோரியதில்லை. இந்தியாவின் பொறுப்பை வலியுறுத்தும் வகையில் செயற்பட்டதில்லை. ஆனால் இன்று கூட்டமைப்பிற்கான, அனைத்து கதவுகளும் அடைக்கப்பட்டிருக்கும் நிலையில்தான் மீண்டும் இந்தியாவை நோக்கி பயணிக்க முயற்சிக்கின்றனர். இந்தியாவின் உதவியை நாடுகின்றனர்.

இந்தியா தமிழர் விடயத்தில் ஒரு தவிர்க்க முடியாத சக்தியென்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஆனால் இந்தியாவை சரியாக கையாளும் வேலைத்திட்டம் தமிழர் தலைமைகளிடம் இருக்கின்றதா? இது தொடர்பில் கூட்டமைப்பு மட்டுமல்ல விக்கினேஸ்வரன் தலைமையிலான அணியினரும் உடனடியாக களத்தில் இறங்கவேண்டியது கட்டாயமான ஒன்றாகும். இந்திய மத்திய அரசை நோக்கி பேச வேண்டிய, அவர்களு டன் இது தொடர்பில் தொடர்புகளை மேற்கொள்ள வேண்டிய தேவை உண்டு. இது மிகவும் அவசரமாக செய்ய வேண்டிய ஒன்றாகும். ஏனெனில் தமிழ் மக்களுக்கான அவகாசம் குறைந்து கொண்டு செல்கின்றது. இந்த இடத்தில் இந்தியாவை எவ்வாறு தலையீடு செய்ய வைக்கலாம் என்பதைப் பற்றி தமிழ்த் தலைமைகள் சிந்திக்க வேண்டும். அதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். ஏனெனில் தேவை தமிழர்களுக்கு இருக்கின்றதே தவிர இந்தியாவிற்கு இல்லை. ஒரு பிராந்திய சக்தியென்னும் வகையில் இந்தியாவின் தேவைகளை எவ்வாறு நிறைவுசெய்துகொள்வதென்று இந்தியாவிற்கு தெரியும். விடயங்களை விளங்கிக்கொண்டு, செயலாற்ற வேண்டியது தமிழர் தரப்புக்களின் கடப்பாடாகும்.

# காயங்கள் ஆறவேண்டும்

அவுஸ்திரேலியாவில் புதிதாக வீடு கட்டிய பின்னர், வீட்டுக்கு முன்புறமும் பின்புறமும் புற்களை விரிப்பாகக் கொண்டு வந்து பதித்து புற்தரையை உருவாக்குவார்கள். சில இடங்களில் புல் அழிந்தாலோ அல்லது, வளராது போனாலோ புல் விதைகளை நட்டு, மெல்பன் கிரிக்கட் மைதானம்போன்று புற்களை வளர்ப்பார்கள்.

பின்பு இரண்டு அல்லது மூன்று கிழமைக்கு ஒரு முறை அவற்றை வெட்டுவார்கள். நன்றாக வளராதபோது அதற்கு பசளையிடுவார்கள். கோடை வந்தால் பணம் கொடுத்து வாங்கிய குடிநீரை ஒன்று விட்டு ஒரு நாள் புல்லுக்குப் பாய்ச்சுவார்கள்.

மீண்டும் வளரும் புற்களைத் தொடர்ந்து வெட்டுவார்கள். இந்த வேலை செய்ய முடியாத என் போன்றோர் ஒருவரை அழைத்து பணம் கொடுத்து புல்லு வெட்டவைப்போம். இங்கு பணம், மனித உழைப்பு, சுத்திகரிக்கப்பட்ட நீர், மற்றும் பசளை இதைவிட இயந்திரங்கள் என மொத்த செலவை இறுதியில் கணக்குப் பார்த்தால் மில்லியன்களில் அளவிடலாம்.

**தற்போது இலங்கைத் தமிழர்கள் வாக்களித்து நாடாளுமன்றம் வந்த தமிழ் அரசியல்வாதிகள் வெளிநாட்டில் வாழ்பவர்களின் ஆசைகளுக்கு ஏற்ப நடப்பதை ஏற்கமுடியாது என்பதை உள்ளூரில் உள்ளவர்கள் சொல்ல வேண்டும்.**

இது தொடர்ச்சியாகச் செய்யப்படும் அபத்தமான செயற்பாட்டில் ஒன்றாக எங்களுக்குத் தெரிவதில்லை. ஏன் அரசுக்கும் தெரிவதில்லை. நான் செய்த இந்த வேலையை எனக்குப் பின்னர் எனது மகன் செய்கிறான். எனது பேரனும் வளர்ந்தபின் செய்வான். எனது தலைமுறை தொடர்ந்து செய்யும்.

இந்த மாதிரியாக 25 வீதமான சிறுபான்மையினருக்கு ஐம்பதுக்கு ஐம்பது என்ற அபத்தமான செயலை சுதந்திரத்திற்கு முன்பு ஜி.ஜி. பொன்னம்பலம் கேட்டார். அவருக்குப் போட்டியாக செல்வநாயகம் எமக்குத் தமிழரசு வேண்டுமென கோசம் வைத்து சிங்கள மக்களைக் கிளர்ந்தெழுப் பண்ணினார்.

பஸ், கார்களின் இலக்கத்தகட்டிலிருந்த சிங்கள ஸ்ரீ க்கு தார் பூசினர். அதன் எதிரொலியாக 1958இல் நடந்த கலவரத்தின் விளைவுகளினால் தென் இலங்கையில் தமிழர்கள் எந்தவொரு வியாபாரமோ ஜீவிதமோ செய்யமுடியாத நிலைக்கும் தள்ளப்பட்டனர்.

அதன்பின் அமிர்தலிங்கத்தின் இனவிரோதப்பேச்சுகள் மற்றும் இலங்கை அரசின் திட்டமிட்ட நடவடிக்கைகளால் 1977 அதன்பின்பு 1981- 1983 என இரு கலவரங்களால் உருவாகியது.

பாதிக்கப்பட்டது யார்? தமிழர்கள்.

அதன்பின்னர் முப்பது வருட காலம் திருவேங்கடம் வேலுப்பிள்ளை பிரபாகரன், சிங்களப் பயங்கரவாதத்தை அதே பயங்கரவாதத்தால் எதிர்ப்போம் என்ற கோசத்துடன் தனது முப்படைகளையும் ஒருங்கிணைத்துப் போர் புரிந்து மீண்டும் ஒரு இலட்சம் தமிழர்களை உயிர்ப்பலி கொடுத்துவிட்டு, ஆயிரக்கணக்கானோரை அங்கவீனர்களாகவும் பெண்களை விதவைகளாகவும் மற்றும் குழந்தைகளை அனாதைகளாகவும் ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட ஈழத்தமிழர்களை உலகெங்கும் அகதிகளாகவும் மாற்றிவிட்டு அவரும் ஆவியாகிவிட்டார்.

சிங்கள பௌத்த இனவாதத்தை இல்லையென்று சொல்லவில்லை. அது இருக்கும். அவர்களது இருப்பிற்கு அது தேவையானதும் கூட. அதுவே ஜனநாயகம். அதை தமிழ் இனவாதத்தால் வெற்றி கொள்ளமுடியாது என்பது இதுவரையிலும் மூளை வளர்ச்சியற்று பிறந்த குழந்தைக்கும் புரிந்திருக்க வேண்டும்.

எந்த பிரச்சினைகளையும் தீர்க்க பல வடிவங்களுண்டு. அதைச் சிந்திக்காமல் மீண்டும் பொன்னம்பலம் -செல்வநாயகம் -அமிர்தலிங்கம் போன பாதையில் போவதற்கு தற்போது இளைப்பாறிய நீதியரசர் கச்சை கட்டியிருக்கிறார்.

இவர் பேசும் விடயங்களை பேசச் சட்டப்படிப்புத் தேவையில்லை. ஏன் பாடசாலைக்கே போயிருக்கத் தேவையில்லை. அறுபதுகளில் யாழ்ப்பாணத்திலிருந்த பொன்ராசா, கோணாந்தோட்டத்து புவனேந்திரன், மணியம் போன்றவர்களை பாராளுமன்றத்துக்கு அனுப்பியிருந்தால் இதைவிட அழகாகச் செய்திருப்பார்கள். வர்ணஜாலமான வார்த்தைகளுடன்.

நமது வாழ்நாள் காலத்தில் சிறையிலிருந்தே அரசுடன் பேசி பிரச்சினைகளை முடித்து வைத்தவர் நெல்சன் மண்டேலா.

அவர் நினைத்திருந்தால் பத்து மடங்கு அதிகமாக இருந்த கறுப்பின மக்களிடம் இனத்துவேசம்பேசி வெள்ளை அரசை தொடர்ந்து நடத்த முடியாது செய்திருக்கலாம். பல கலவரங்களைத் தூண்டியிருக்கலாம். ஆனால், அந்த மகான் அவ்வாறு செய்யவில்லை. அரசுக்கெதிரான சில வன்முறைகளை ஆரம்பத்தில் அங்கீகரித்த போதிலும் பிற்காலத்தால் அவைகூட நிறுத்தப்பட்டது.

தற்போது இலங்கைத் தமிழர்கள் வாக்களித்து நாடாளுமன்றம் வந்த தமிழ் அரசியல்வாதிகள் வெளிநாட்டில் வாழ்பவர்களின் ஆசைகளுக்கு ஏற்ப நடப்பதை ஏற்கமுடியாது என்பதை உள்ளூரில் உள்ளவர்கள் சொல்லவேண்டும்.

இல்லையெனில் விடுதலைப்புலிகள் காலத்தைப் போன்றதோர் காலம் உருவாகலாம். இனவாதம், பழிவாங்கல், வெறுப்பு என்பனவற்றை மனிதர்கள் மத்தியில் இலகுவாக உருவாக்கமுடியும் ஆனால், அவை உருவாகியபின்பு அவற்றுக்கு கடிவாளம்போடமுடியாது. ■

- நடேசன் - அவுஸ்திரேலியா
uthayam12@gmail.com

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



செய்திகள்

# ‘13’ தொடர்பில் இந்தியா எமக்கு அழுத்தம் கொடுக்கவே முடியாது!

## உறுதிபடச் சொல்கிறார் சரத் வீரசேகர



**கொழும்பு, செப் 07**

**13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு இலங்கைக்கு இந்தியா எவ்வகையிலும் அழுத்தம் கொடுக்கவே முடியாது என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் இராஜாங்க அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.**

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை சிறப்புத் தூதுவர் மூலம் கையாள இந்தியா முயற்சிக்கின்றது என வெளியாகிய செய்திகள் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை விவகாரத்தில் இந்தியா தலையிடவே முடியாது. அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் இலங்கை - இந்தியா உடன்படிக்கையின் பிரகாரம் அன்று நிறைவேற்றப்பட்டமை உண்மை. அதற்காக இந்தியா சொல்வதையெல்லாம் நாம் ஏற்கவேமாட்டோம். இந்த விவகாரத்தில் இந்தியா அமைதியாக இருப்பதே நல்லது.

13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு இலங்கைக்கு இந்தியா எந்த வகையிலும் அழுத்தம் கொடுக்கவே முடியாது. இந்தத் திருத்தத்தின் பிரகாரம்தான் இலங்கை 9 மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது. அதாவது இலங்கை 9 துண்டுகளாக்கப்பட்டன. இதனால்தான் தமிழீழ விடுதலைப்புலிகளின் கையும் ஓங்கின. அதேவேளை, வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமது தாயகம் என்று தமிழர்கள் உரிமை கோரின. இப்போதும் அதே நிலைப்பாட்டில்தான் தமிழர்கள் இருக்கின்றார்கள். அதனால் தனிநாட்டுக் கோரிக்கை அன்று தொடக்கம் இன்று வரை வலுப்பெறுகின்றது.

13 ஆவது திருத்தத்தின் பிரகாரம் மாகாண சபைகளுக்குச் சிக்கலுக்குரிய அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளமையால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. அதனால்தான் மாகாண சபைகளுக்குக் காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்க வேண்டாம் என்று நாம் கூறுகின்றோம்.

புதிய அரசமைப்பின் ஊடாக 13ஆவது திருத்தத்தில் உள்ள சிக்கலான விடயங்களுக்கு முடிவுகட்டப்பட வேண்டும். அதன்பின்னர்தான் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியும்-என்றார்.

# கந்தகாடு முகாமில் கைதிக்கு கொரோனா!

இலங்கையில் மேலும் மூன்று பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத் தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கந்தகாடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் புனர்வாழ்வுக்கு உட்படுத் தப்பட்டிருந்த கைதி ஒருவருக்கும் மற்றும் இந்தியாவில் இருந்து வருகை தந்த இருவருக்கும் இவ்வாறு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

# முட்டைக்கான விலை நிர்ணயம்

கொழும்பு, செப் 07

ஒரு முட்டையின் விலையை இன்று முதல் 2 ரூபாவால் குறைப்பதற்கு நாட்டிலுள்ள அனைத்து முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தினரும் தீர்மானித்துள்ளனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் அலரிமாளிகையில் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னரே இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாகச் சங்கத்தின் தலைவர் ஆர்.எம். சரத் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி வெள்ளை முட்டையின் மொத்த விலை 19.50 ரூபாவாகவும் சிவப்பு முட்டையின் விலை 20 ரூபாவாகவும் குறைக்கப்படும் என்று அவர் கூறினார்.

ஒரு வெள்ளை முட்டையின் சில்லறை விலை 21 ரூபாவாகவும் சிவப்பு முட்டையின் விலை 22 ரூபாவாகவும் குறைக்கப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# மந்திகை வைத்தியசாலையின் அம்புலன்ஸ் வாகனம் விபத்து!

யாழ்ப்பாணம், செப் 07

மந்திகை ஆதார வைத்தியசாலையின் அம்புலன்ஸ் வாகனம் குஞ்சர் கடைப் பகுதியில் விபத்துக்குள்ளாகியது.

நேற்று அதிகாலை1.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மந்திகை ஆதார வைத்தியசாலையில் இருந்து அவசர நோயாளி ஒருவரை யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்ப்பித்துவிட்டு மீண்டும் மந்திகை நோக்கிப் பயணித்த அம்புலன்ஸ் வாகனம் யாழ்ப்பாணம்-பருத்தித்துறை பிரதான வீதியில் வேககட்டுப்பாட்டை இழந்து வீதி மைல் கல்லையும் சேதப்படுத்தி வீதியருகில் கடை ஒன்றையும் சேதப்படுத்தி விபத்துக்குள்ளானது.

இதனால் அம்புலன்ஸ் வாகனத்தின் முன்பக்கம் பலத்த சேதமடைந்துள்ளது.

கடந்த வருடம் மத்திய சுகாதார அமைச்சினால் மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட புதிய அம்புலன்ஸ் வாகனமே விபத்தில் சிக்கியுள்ளது.

இது தொடர்பில் நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# பயங்கரவாத சட்டத்தின் கீழ் கைதாவோர் தங்காலைக்கு!

கொழும்பு, செப் 07

பயங்கரவாதத்துடன் தொடர்புடையவர்களைத் தடுத்து வைப்பதற்குரிய நிலையமாகத் தங்காலை பழைய சிறைச்சாலை பயன்படுத்தப்படவுள்ளது.

இதற்கான அதிசிறப்பு வர்த்தமானி அறிவிப்பு 2020 செப்ரெம்பர் 4ஆம் திகதியிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

1982 ஆண்டு இலக்கம் 10 இன் கீழான பயங்கரவாதத்தைத் தடுக்கும் (தற்காலிக சிறப்பு ஏற்பாடுகள்) (திருத்தம்) சட்டத்துடன் வாசிக்கப்பட வேண்டிய 1979 ஆண்டு இலக்கம் 48 இன் கீழ் பயங்கரவாதத்தை தடுக்கும் (தற்காலிக) ஒழுங்கு விதிகள் சட்டத்தின் 15 ஆவது சரத்தின் கீழ் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைவாக அந்த சரத்தில் கூறப்பட்டுள்ள பணிகளுக்காக-தங்காலை பழைய சிறைச்சாலையைப் பயங்கரவாதத்துடன் தொடர்புபட்டவர்களை தடுத்து வைக்கும் இடமாக பயன்படுத்துமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுத்த உத்தரவிற்கு அமைய, பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமல் குணரட்ன இதற்குரிய வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

# எண்ணெய்க் கப்பலின் ஊழியர்கள் கைதாவரா?

## சட்டமா அதிபரிடம் ஆலோசனை

கொழும்பு, செப் 07

இலங்கைக் கடற்பரப்பில் தீப்பற்றி எரிந்த எண்ணெய் தாங்கிக் கப்பலான நியூ டயமண்ட் கப்பலின் கப்டன் மற்றும் பணியாளர்களை கைது செய்வது குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனையை சுற்றுச்சூழல் அதிகாரசபை, வணிகக்கப்பல் செயலகம் என்பன கோரியுள்ளன.

சங்கமன்கந்த கடற்பரப்பில் தீப்பிடித்த நிலையில், கரையை நோக்கி அடித்து வரப்பட்ட எண்ணெய்க் கப்பல் நேற்று முன் தினம் மாலை, கரையிலிருந்து 40 கடல் மைலுக்கு அப்பால் இழுத்துச் செல்லப்பட்டது.

தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருந்தாலும், முழுமையாக தீ அணைக்கப்படவில்லையென்பது வெளியான காட்சிகளில் புலப்பட்டது. நேற்றும் தீயணைப்புப் பணிகள் தொடர்ந்தன.



கப்பலின் கப்டன் மற்றும் குழு உறுப்பினர்கள் விதிமுறைகளையும் அவர்களின் கடமைகளையும் பின்பற்றத் தவறிவிட்டனர் என்ற அவதானிப்புகளுக்குப் பிறகு அவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வணிகக் கப்பல் செயலகப் பணிப்பாளர் நாயகம் ஏ.டபிள்யூ.செனவிரத்ன, தீயைக் கட்டுப்படுத்த அரசால் செய்யப்பட்ட செலவுகளுக்கு காப்பீட்டைக் கோருவது குறித்து சட்டமா அதிபர் திணைக்களத்திடம் ஆலோசனை கோரியுள்ளதாகத் தெரிவித்தார்.

அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க கப்பல் கப்டன் மற்றும் குழுவினர் கைது செய்யப்படவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கப்பலின் கொதிகலனை கண்காணிக்கத் தவறியமை, சரியான நேரத்தில் நடவடிக்கையெடுக்கத் தவறிய குற்றச்சாட்டுக்களை கப்பன் கப்டன் எதிர்கொள்கிறார்.

காப்பீட்டு கோரிக்கைகள் குறித்து விவாதிக்க வெஸ்ட் ஓஃப் இங்கிலாந்து காப்பீட்டு நிறுவனம் நான்கு பிரதிநிதிகளை கொழும்புக்கு வெள்ளிக்கிழமை அனுப்பியுள்ளது.

இந்தக் குழு அடுத்த சில நாட்களில் கப்பலை ஆய்வு செய்ய உள்ளது.

கப்பல் கப்டன் இந்திய கடலோர காவல்படையின் கப்பலிலும், ஏனைய 20 பணியாளர்கள் இலங்கைக் கடற்படையின் கப்பலிலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 9 எதிர்க்கட்சி எம்.பிக்கள் ‘20’ திருத்தத்துக்கு ஆதரவு?

கொழும்பு, செப் 07

அரசமைப்பின் 20ஆவது திருத்தத்துக்கு நாடாளுமன்றத்தில் ஆதரிக்க 9 எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் முடிவு செய்துள்ளனர் எனக் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இரண்டு குழுக்களில் உள்ள ஒன்பது எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாம் ஆதரவளிப்பதாக அரசின் முன்னணி அரசியல்வாதி ஒருவருக்கு உறுதியளித்துள்ளனர் எனவும் அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது.

செய்திகள்

# ‘13’ ஐ செயற்படுத்துவதில் உறுதியாக உள்ள இந்தியா

## தூதுவரின் நிலைப்பாடும் அதுவே

**கொழும்பு, செப் 07**

**13ஆவது திருத்தம் நடைமுறையில் இருக்க வேண்டும் என்பதில் இந்தியத் தூதுவர் உறுதியாக வுள்ளார் என அவரின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.**



கொழும்பு ஆங்கில ஊடகமொன்று இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது.

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் மற்றும் 19ஆவது திருத்தம் ஆகியவற்றில் திருத்தங்களை மேற்கொள்ளவுள்ளதாக அரசில் ஒரு தரப்பினர் கூறி வருகின்றனர்.

அதேபோன்று அரசில் இன்னொரு தரப்பினர், 13ஆவது திருத்தத்தை முழுமையாக நீக்குவதே நாட்டின் பெரும்பாலான பிரச்னைகளுக்கு தீர்வைப் பெற்றுத்தரும் என வலியுறுத்தி வருகின்றனர்.

இதேவேளை, ஐக்கிய தேசியக்கட்சி, மக்கள் விடுதலை முன்னணி மற்றும் சிறுபான்மைக் கட்சிகள் அரசின் இத்தகைய கருத்துக்கு எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றன.

அதாவது, 19ஆவது திருத்த சட்டத்தை நீக்கி, 20ஆவது திருத்தம் கொண்டுவரப்படுமாயின் முழு அதிகாரமும் ஒருவரின் கீழ் குவிக்கப்படும். இது சர்வாதிகாரப் போக்குக்கு வித்திடுமென அவை எச்சரிக்கை விடுத்துள்ளன.

மேலும், 13ஆவது திருத்தத்தை நீக்குவதற்கு இந்தியா நிச்சயம் எதிர்ப்பை வெளியிடுமெனவும் சிறுபான்மைக் கட்சிகள் கூறி இருந்தன.

இந்நிலையிலேயே, 13ஆவது திருத்தம் தொடர்பில் இந்தியத் தூதுவரின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை என இந்தியத் தூதரகப் பேச்சாளர் தெரிவிததுள்ளார்.

நல்லிணக்கம் மற்றும் சமாதானம் தொடர்பாக இந்தியா கொண்டுள்ள நீண்ட கால நிலைப்பாட்டையும் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தவேண்டும் என்பதையும் இந்தியத் தூதுவர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார் எனவும் தூதரகப் பேச்சாளர் ஆங்கில ஊடகத்திடம் குறிப்பிட்டுள்ளார்.



# கரடிப்போக்கில் விபத்து

கிளிநொச்சி, செப் 07

கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்திக்கு அண்மையில் நேற்று முன்தினம் இரவு கார் ஒன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதில் சாரதி காயமடைந்துள்ளார்.

கிளிநொச்சி ஏ-9 வீதியில் கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த கார் ஒன்று வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறி ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தின்போது காரின் சாரதி காயமடைந்த நிலையில் மீட்கப்பட்டார்.

இவ்வாறு காரைச் செலுத்தியவர் பளை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி எனவும் தெரிவிக்கப்பட்டது.

# ஜனாதிபதி ஆணைக்குழு விஜயகலாவுக்கு அழைப்பு!

## சுவிஸ்குமாரை விடுவிக்க அழுத்தம் கொடுத்தாராம்: பொலிஸ் கான்ஸ்டபிள் சாட்சியத்தின் எதிரொலி!!

கொழும்பு, செப் 07

முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் அரசியல் பழிவாங்கல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையாகவேண்டும் என அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 2015ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட்ட குமார் சர்வானந்தாவும் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

இதன்படி, எதிர்வரும் 17ஆம் திகதி இந்த இருவரும் அரசியல் பழிவாங்கல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையாகவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் வழங்கிய சாட்சியத்துக்கமைவாகவே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வித்தியா கொலை வழக்கின் பிரதான சந்தேக நபரான மகாலிங்கம் சசிகுமார் எனப்படும் சுவிஸ்குமார் என்பவரை விடுவிக்குமாறு



விஜயகலா மகேஸ்வரன் நேரடி அழுத்தம் வழங்கினார் என அந்த பொலிஸ் கான்ஸ்டபிள் சாட்சியமளித்துள்ளார்.

அரசியல் பழிவாங்கல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் நேற்று முன் தினம் முன்னிலையானபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, 2011ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவர் உயிரிழந்தமை தொடர்பில் தான் உள்ளிட்ட 5 பேர் 10 வருட சிறைத் தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டமை, விஜயகலா மகேஸ்வரனின் அழுத்தம் காரணமாகவே எனக் கருதுவதாகவும் அவர் சாட்சியத்தில் கூறியுள்ளார்.

# சில தினங்கள் தொடரவுள்ள கடும் மழை

இலங்கையில் கடும் மழையுடனான கால நிலை எதிர்வரும் சில நாட்களுக்கு தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களிலும் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழைவீழ்ச்சி பதிவாகும் என இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டை ஊடறுத்து மணித்தியாலத்திற்கு 50 தொடக்கம் 60 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடுமெனவும் வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

மேல், மத்திய, தென், சப்ரகமுவ, வடமேல் மாகாணங்களில் இடைக்கிடையே மழை பெய்வதுடன் ஊவா, கிழக்கு, வடமத்திய மாகாணங்களிலும் முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களிலும் பிற்பகல் வேளையில் இடியுடன் கூடிய மழை பெய்யலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எண்ணெய்க் கசிவு குறித்து அறிக்கை கோரும் டக்ளஸ்

கொழும்பு, செப் 07

அம்பாறை - கல்முனை கடற்பிரதேசத்தில் எண்ணெய்க் கசிவு ஏற்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு, துறைசார் அதிகாரிகளுக்கு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உத்தரவிட்டுள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் சங்கமன்கந்த கடற்பரப்பில் இருந்து 38 கடல் மைல் தூரத்தில் பயணித்துக்கொண்டிருந்த எண்ணெய்க் கப்பலில் ஏற்பட்ட தீ விபத்து கட்டுப்படுத்தப்பட்ட நிலையில் கல்முனைக் கடற்பிரதேசத்தில் சந்தேகத்திற்கிடமான எண்ணெய் படிமங்கள் பிரதேச கடற்றொழிலாளர்களினால் அவதானிக்கப்பட்டது. இதனால் அச்சமடைந்த கடற்றொழிலாளர்கள் தொழிலுக்குச் செல்வதை நிறுத்தியுள்ளனர்.

இந்த விடயம் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்கு கொண்டு



வரப்பட்டதையடுத்து, நாரா எனப்படும் நீரியல் வள ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் நவரட்ணராஜா தலைமையிலான அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் அவசர கலந்துரையாடலை நடத்திய அமைச்சர், கடற்றொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள அச்சம் தொடர்பில் உடனடியாக ஆய்வுகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தியுள்ளார்.

# அபிவிருத்தி எனக் கூறி மக்களிடம் வாக்கு பெற்றோரை தூங்கவிடாதீர்

## மக்களுக்குச் சொல்கிறார் சாணக்கியன்



மட்டக்களப்பு, செப் 07

அபிவிருத்தி என்று கோசமிட்டு மக்களின் வாக்குகளைப் பெற்றவர்களைத் தூங்கவிடக்கூடாது என நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு- போரதீவுப்பற்றில் நேற்று முன் தினம் சனிக்கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போதுள்ள அரசு அசுர பலத்துடன் உள்ளது. அவர்கள் நினைத்ததை செய்வதற்காகவும்தான் 20ஆவது திருத்தத்தை உருவாக்கியுள்ளனர்.

ஆகவே, இனி நாம் அபிவிருத்தி என்று கோசமிட்டு மக்களின் வாக்குகளைப் பெற்றவர்களைத் தூங்கவிடக்கூடாது. அவர்களிடம் சென்று எமக்குத் தேவையானதைக் கூறி அவற்றைப் பெற்று வரும்படி அழுத்தம் கொடுக்கவேண்டும்.

என்னால் முடிந்த செயற்பாடுகளை எனது காலத்தினுள் நிச்சயம் செய்து தருவேன்- என்றார்.

செய்திகள்

# 'அனைவருக்கும் வீடு' திட்டத்தில் 113 பயனாளிகளுக்கு கொடுப்பனவு



யாழ்ப்பாணம், செப் 07

'அனைவருக்கும் வீடு' என்ற செயற்றிட்டத்திற்கு கீழ் யாழ்ப்பாணத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வீடமைப்புக்கான உதவிகளை வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 113 குடும்பங்களுக்கு வீடுகளை நிர்மாணிப்பதற்கான முதலாம் தவணை கொடுப்பனவு பயனாளிகளுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டது.

நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளரும், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் தலைமையில் இதற்கான நிகழ்வு யாழ் மாவட்ட செயலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ். அரச அதிபர் மகேசன் உட்பட பலர் பங்கேற்றனர்.

# நீதித்துறை, சட்டவாக்கத்துறையை பலவீனப்படுத்தும் கோட்டா அரசு!

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு,செப் 07

**அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் சட்டவாக்கச் சபையையும் நீதித்துறையையும் பலவீனப்படுத்த அரசு முயற்சிப்பதாக எதிர்க்கட்சி குற்றம் சாட்டியுள்ளது.**



ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கர், முன்மொழியப்பட்ட வரைவு மூலம் இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள் நாடாளுமன்றத்துக்குள் நுழைய முடியும் என்பதையும் சுட்டிக்காட்டினார்.

20ஆவது திருத்தம் ஜனாதிபதியை சர்வாதிகாரியாக மாற்றுவதற்கான ஒரு வழியாகும் என்று அவர் குறிப்பிட்டார். அத்துடன், தேசிய பாதுகாப்பில் ஜனாதிபதியின் பொறுப்புக்கூறலை மட்டுப்படுத்துகின்றது என்றும் அவர் கூறினார்.

20ஆவது திருத்தத்தின் மூலம், சுயாதீன ஆணைக்குழுக்களின் உயரதிகாரிகளையும், அரச உயரதிகாரிகளையும் ஜனாதிபதியே நியமிப்பதன் மூலம், ஆணைக்குழுக்களால் பலனில்லையென்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

பிரதம நீதியரசரை ஜனாதிபதி நியமிப்பதால் நீதித்துறை பலவீனமடையும், அரசமைப்பின் எல்லைக்குள் சுதந்திரமாக பேசுவதற்கான உரிமை மீறப்படுவதாக அவர் கூறினார்.



# இறைச்சிக்காக கடத்தப்பட்ட மாடுகள் பொலிஸாரால் மீட்பு

வவுனியா, செப் 07

வவுனியா நெடுங்கேணியில் இருந்து மதவாச்சி நோக்கி இறைச்சிக்காகக் கடத்திச்செல்லப்பட்ட 11 மாடுகளை மடுக்கந்தை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

இந்த மாடுகள் நெடுங்கேணியிலிருந்து மாமடுப் பகுதியூடாக மதவாச்சி நோக்கிக் கொண்டு செல்லப்படவிருந்த நிலையில் நேற்று அதிகாலை மடுகந்தைப் பகுதியில் மீட்கப்பட்டன.

அனுமதிப்பத்திரம் இன்றி முறையான நடைமுறைகளைப் பேணாமல் இந்த மாடுகள் கொண்டு செல்லப்பட்டதாகவும் அவற்றை கடத்திச்செல்லப் பயன்படுத்தப்பட்ட கப் ரக வாகனத்துடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.



# பெண்கள் எதிர்நோக்கும் பிரச்னை குறித்து கிளிநொச்சியில் விழிப்புணர்வு கருத்தமர்வு

கிளிநொச்சி,செப்.07

பெண்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பான சட்ட ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளும் விழிப்புணர்வு கருத்தமர்வு நேற்று கிளிநொச்சி கூட்டுறவுச் சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் அந்த மையத்தின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் ஆர். பானுஜா தலைமையில் இந்தக் கருத்தரங்கும், செயலமர்வும் இடம்பெற்றது.

இந்தக் கருத்தமர்வில் சட்டத்தரணி சர்மிளா, சட்ட ஆலோசனைகளையும் விழிப்புணர்வு கருத்துக்களையும் வழங்கினார்.

இதன்போது, பாலியல் இலஞ்சம், பாலியல் சுரண்டல், விவாகரத்து, தாபரிப்பு, வன்முறைகள் தொடர்பான பிரச்னைகளுக்குச் சட்டரீதியான ஆலோசனைகள் மற்றும் குற்றங்களுக்கான தண்டனைகள் தொடர்பான விழிப் புணர்வு இடம்பெற்றது.

இந்தக் கருத்தமர்வில் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து பெண்கள், இளைஞர்கள் என 150 பேர் வரை பங்கு கொண்டு பயன் பெற்றனர்.

# கஞ்சாவுடன் பெண் ஓமந்தையில் கைது

வவுனியா, செப் 07

வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலமோட்டை மூன்று முறிப்பு பகுதியில் இரண்டு கிலோ கேரளக் கஞ்சாவுடன் பெண் ஒருவரை நேற்று முன்தினம் மாலை பொலிஸார் கைது செய்தனர்.

பாலமோட்டைப் பகுதியில் மேற்கொண்ட திடீர்ச் சோதனை நடவடிக்கையின்போது மோட்டார் சைக்கிளின் கீழ் பகுதியில் இரண்டு கிலோ கேரளக்கஞ்சாவைக் கொண்டு சென்ற பெண்ணைக் கைது செய்துள்ளமையுடன் அவர் பயணித்த மோட்டார் சைக்கிளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். நெளுக்குளம் பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய பெண் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட பெண்ணை நீதிமன்ற அனுமதியுடன் ஏழு நாள்கள் பொலிஸ் தடுப்பு காவலில் வைத்து விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்குரிய நடவடிக்கையை ஓமந்தை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# பொய் சொல்கிறார் தயாசிறி முகநூலில் சந்திரிகா காட்டம்

கொழும்பு, செப் 07

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர ஊடகங்களுக்குத் தெரிவித்த கருத்து முற்றிலும் தவறானது எனத் தனது முகநூல் பக்கத்தில் பதிவிட்டுள்ளார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க.


அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

அண்மையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 69ஆவது ஆண்டு நிறைவு வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு தனக்கு அழைப்பு விடுத்தார் என கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்த கருத்தானது உண்மைக்கு புறம்பானது.

கடந்த காலங்களில் நடந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூன்று ஆண்டு நிறைவு மாநாடுகளுக்கு எனக்கு எவ்வித அழைப்பும் கிடைக்கவில்லை என்பதை நான் உறுதியாக கூறுகிறேன்.

கட்சியின் உறுப்பினர்களை ஏமாற்றும் நோக்கில் இவர்களால் கூறப்படும் பொய்கள் குறித்து ஆராய்வது உண்மையான சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரின் கடமையாகும்.

அதாவது மத்திய செயற்குழுக் கூட்டங்களுக்கு பல வருடங்களாக எனக்கு அழைப்புகள் கிடைக்கவில்லை. அதே போலவே கட்சியின் மாநாடுகளுக்கு எந்தவித அழைப்பும் கிடைக்கவில்லை.



அப்படி கிடைத்திருந்தால் நாட்டுக்கு சேவையாற்ற வழியை ஏற்படுத்திக் கொடுத்த கட்சிக்காக நான் அவற்றில் கலந்துகொள்ளாமல் இருந்திருப்பேன் என நீங்கள் நினைக்கின்றீர்களா?. அப்படியான அழைப்புகள் கிடைத்திருந்தால், அவற்றை சந்தோசமாக ஏற்றுக்கொண்டிருப்பேன் எதிர்காலத்திலும் இவ்வாறே நடந்திருக்கும்-என்றார்.

# தனிமைப்படுத்தல் முடிந்து 552 பேர் நேற்று வீடுகளுக்கு

கொழும்பு, செப் 07

முப்படையினரால் நடத்தப்படும் தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களில் இருந்து 552 பேர், தனிமைப்படுத்தலை நிறைவு செய்து வெளியேறியுள்ளனர் என கொவிட்19 தொற்றைத் தடுக்கு தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய இதுவரை 37 ஆயிரத்து 552 பேர் தனிமைப்படுத்தல் செயற்பாடுகளை நிறைவு செய்து வெளியேறியுள்ளனர்.

மேலும் 7ஆயிரத்து 403 பேர், 70 தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை ஆயிரத்து 880 பேருக்கு, பி.சி.ஆர் பரிசோதனைகள் நேற்று முன் தினம் சனிக்கிழமை மாத்திரம் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய நாட்டில் இதுவரையான காலப்பகுதியில் 2 இலட்சத்து 37ஆயிரத்து 610 பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

செய்திகள்

# 20ஆவது திருத்தம் நாட்டு நலனுக்கே!



## சபாநாயகர் விளக்கம்

கொழும்பு, செப் 07

**நாட்டுக்காக மேற்கொள்ளப்படும் ஒரு செயற்பாடே 20ஆவது திருத்தச் சட்டவரைவு என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.**

**20ஆவது திருத்தச்சட்டமூலம் தொடர்பாக ஆளும் தரப்பில் ஒரு விதமாகவும் ஏனைய கட்சிகள் ஒருவிதமாக கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றன.**

இந்நிலையிலேயே சபாநாயகர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

20 ஆவது திருத்தச்சட்டவரைவை அனைவரது ஒத்துழைப்புடன்தான் நாம் நிறைவேற்றவேண்டும்.

இதற்கு நாடாளுமன்றில் அனைவரது ஒத்துழைப்பும் அவசியமாகும். இது நாட்டுக்காக மேற்கொள்ளப்படும் ஒரு செயற்பாடு. இது ஒரு தரப்பை மட்டும் சார்ந்து இருக்கக்கூடாது.

19 ஆவது திருத்தச்சட்டத்தை நாம் தான் கடந்த அரசின்போது கொண்டுவந்தோம். ஒருவர் தான் எதிர்ப்பை வெளியிட்டார்.

நாட்டுக்கு நல்லது நடக்கும் என்று எதிர்ப்பார்த்தே அதனைக் கொண்டுவந்தோம். ஆனால், எமது எண்ணம் நிறைவேறியதா இல்லை என்பதில் சந்தேகம் உள்ளது-என்றார்.

# 800 கிலோ மஞ்சளுடன் மூவர் கைது

கொழும்பு, செப் 07

கற்பிட்டிப் பகுதியில் கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது சட்டவிரோதமான முறையில் மஞ்சள் ஏற்றிச்சென்ற பாரவூர்தியுடன் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து 800 கிலோ கிராம் மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்களும் மேலதிக விசாரணைகளுக்காக கற்பிட்டி பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளனர்.

# ‘13’ ஐ நீக்குவது குறித்து இன்னும் தீர்மானமில்லை

கொழும்பு, செப் 07

13ஆவது திருத்தச்சட்டத்தை நீக்குவது தொடர்பாக கொள்கைத் தீர்மானங்கள் எதனையும் எமது பாராளுமன்றக் குழு எடுக்கவில்லை என்று பிராந்திய உறவுகள், நடவடிக்கைகள் இராஜங்க அமைச்சர் தாரக பாலசூரிய தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது பாராளுமன்றக் குழுவிலேயே அதிகமான கொள்கைத் தீர்மானங்கள் எடுப்பது வழமையாக இருக்கின்றது. அந்த வகையில் இதுவரை 13ஆவது திருத்தச்சட்டத்தை நீக்கவேண்டும் என்றே எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படவில்லை.

### தாரக பாலசூரிய கூறுகிறார்

இந்த விடயத்தில் எமது தரப்பில் சிறுகுழுவினரே அவ்விதமான நிலைப்பாட்டைக் கொண்டவர்களாக உள்ளனர். ஆகவே இது அரசின் அயல்நாடுகளுடனான உறவுடன் சம்பந்தப்பட்ட விடயமொன்றாகின்றது.

அதேவேளை, சிலருடைய தவறான கணிப்பாக காணப்படுவது என்னவென்றால், மாகாண சபை முறைமையை ஒழிக்கின்ற போது நிதி விரயமாகது என்பதாகும். உண்மையில் அவ்வாறானதொரு நிலைமை இருக்காது என்பதே யதார்த்தமாகும்-என்றார்.

# அ’புரத்தில் அநாகரிகம் 100 ஜோடிகள் சிக்கினர்!

அநுராதபுரம், செப்.07

முறைகேடான வகையில் நடந்து கொண்ட குற்றச்சாட்டில், 100 இள வயது ஜோடிகளைப் பொலிஸார் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை கைது செய்தனர்.

அநுராதபுரம் புனித பூமியில், பெரும்பாலான இளவயதுடைய ஜோடிகள் முறைகேடான வகையில் நடந்து கொள்கிறார்கள் எனப் பொது மக்களால் பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய அந்தப் பகுதியில் நேற்றுக்காலை திடீர் சுற்றிவளைப்பை மேற்கொண்ட பொலிஸார், அநாகரிகமாக நடந்துகொண்ட குற்றச்சாட்டின் பேரில் இளவயதுடைய 100 ஜோடிகளைக் கைது செய்தனர்.

இவர்களில் பெரும்பாலானோர், கல்வி நிலையங்களுக்குச் செல்வதாக வீடுகளில் கூறிவிட்டு வந்து, இங்குள்ள ரயில் நிலையங்கள் மற்றும் பூங்காக்கள் உள்ளிட்ட பொது இடங்களில் முறைகேடாக நடந்து கொள்கின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட பிள்ளைகளை அவர்களது பெற்றோரிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

ஈழநாடு Eelanadu

நாளிதழில் உங்கள் விளம்பரங்களை வெளியிட

**707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

# விபத்தில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

மட்டக்களப்பு-கொழும்பு நெடுஞ்சாலை, ஆறுமுகத்தான் குடியிருப்பில் இடம்பெற்ற வீதி விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்ற இந்த விபத்தில், கொம்மாந்துறை கலைவாணி வீதியைச் சேர்ந்த கிட்ணபிள்ளை குபேந்திரன் (வயது-46) என்பவரே உயிரி ழந்தார்.

ஆறுமுகத்தான் குடியிருப்பிலுள்ள கிறிஸ்தவ தேவாலயத்தின் ஆராதனையில் பங்கு கொண்டு தனது சைக்கிளில் பிரதான வீதியூடாக வீடு திரும்பும்போது, பின்னால் வந்த டிப்பர் மோதியதில் அவர் உயிரிழந்தார் எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. டிப்பர் சாரதியை ஏறாவூர்ப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.



# ஆதன வரியை குறைக்காவிடின் வெகுஜனப் போராட்டம் நடக்கும்

### கரைச்சி பிரதேச சபை உறுப்பினர்கள் எச்சரிக்கை

கிளிநொச்சி, செப் 07

கரைச்சி பிரதேச சபையால் அறவிடப்படவுள்ள அதிகரித்த ஆதன வரியை மக்களின் நலன் கருதி குறைக்காதுவிட்டால் பாதிக்கப்படவுள்ள மக்களை ஒன்றுதிரட்டி வெகுஜனப் போராட்டம் மேற்கொள்ளப்படும் எனக் கரைச்சி பிரதேச சபையின் சமத்துவக் கட்சியின் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சியில் நேற்றுக் கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர்கள் இதனைக் கூறினர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்-

கிளிநொச்சி மாவட்டம் வறுமையில் முன்னிலையில் இருக்கிறது. பெரும்பாலான மக்கள் மூன்று வேளை உணவு உண்ணுவதே கேள்விக்குரியது. யுத்தத்தின் பாதிப்புக்களை முழுமையாக எதிர்கொண்டு படிப்படியாக மீண்டும் வரும் மாவட்டமாக அது காணப்படுகிறது. இப்படியான ஒரு மாவட்டத்தில் புதிதாக ஆதனவரி அறவிடுகின்றபோது எடுத்த எடுப்பிலேயே பத்து வீதம் என்ற அதிகரித்த வீதத்தில் அறவிடுவது மக்களைப் பெரும் சுமைக்குள் தள்ளிவிடும்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட சபை மக்களுக்கானதாக இருக்க வேண்டுமே தவிர மக்களுக்கு எதிரானதாக இருக்கக் கூடாது. ஆனால் கரைச்சி பிரதேச சபையின் செயற்பாடுகளில் மக்கள் நலன்களுக்கு அப்பால் கட்சி நலன்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. தன்னிச்சையான செயற்பாடுகள் முன்னெடுக்கப் படுகின்றன. எனவே கரைச்சி பிரதேச சபை இதனை உடனடியாக நிறுத்தவேண்டும். இல்லையெனில் நாம் மக்களை திரட்டி வெகுஜனப் போராட்டத்தை மேற்கொள்வோம்-என்றனர்.

இந்த ஊடக சந்திப்பில் சமத்துவக் கட்சியின் சுயேச்சைக் குழு பிரதேச சபை உறுப்பினர்ளான த.மோகன்ராஜ், த.ரஜனிகாந், கபிரியேல் லோறன்ஸ், இ.இளங்கோ ஆகியோர் கலந்துகொண்டனர்.




# எண்ணெய்க் கப்பலில் ஏற்பட்ட தீ முழுமையான கட்டுப்பாட்டுக்குள்

கொழும்பு, செப் 07

இலங்கைக்கு கிழக்கே 38 கடல் மைல்கள் தொலைவில் தீப்பிடித்த, பெரும் எண்ணெய் தாங்கிக் கப்பலில் ஏற்பட்ட தீ முழுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்று இலங்கைக் கடற்படைத் தளபதி அறிவித்துள்ளார்.

இலங்கைக் கடற்படை, இலங்கை விமானப்படை, இலங்கை துறைமுக அதிகார சபை, இந்தியக் கடற்படை, இந்தியக் கடலோர பாதுகாப்புப்படை ஆகியன இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளன.

கடந்த வியாழக்கிழமை (செப்.3) காலை 8 மணியளவில் அம்பாறை, சங்கமன்கந்த பகுதியிலிருந்து 38 கடல் மைல் தொலைவில் பயணித்துக் கொண்டிருந்த, எம்.ரி நியூ டயமண்ட் கப்பலின் பிரதான இயந்திர அறையில் கொதிகலன் வெடித்ததைத் தொடர்ந்து தீ பரவியிருந்தது.

அந்த எண்ணெய்க் கப்பலில் இருந்த 23 பணியாளர்களில் 22 பேரை இலங்கைக் கடற்படை மீட்டெடுத்தது. கப்பல் குழுவினரின் ஆரம்பகட்ட தகவல்களின் அடிப்படையில், கப்பலின் கொதிகலன் வெடிப்பைத் தொடர்ந்து பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்திருந்தார்.

ஈழநாடு
வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Eelanadu

# இல்மனைற் அகழ்வுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்



அம்பாறை, செப் 07

அம்பாறை-திருக்கோவில், பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவுகளில் இல்மனைட் அகழ்வுக்கு அரசு அனுமதி வழங்கக்கூடாது என்பதை வலியுறுத்தி நேற்று ஆர்ப்பாட்டப் பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டது.

திருக்கோவில், தாண்டியடியைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் சுலோக அட்டைகளை ஏந்தியவாறு கவனயீர்ப்புப் பேரணியில் ஈடுபட்டனர்.

தாண்டியடி பிரதான வீதியில் ஆரம்பமான இந்தப் பேரணி திருக்கோவில் மணிக்கூட்டுக் கோபுரம் வரை பயணித்தது.

2018 ஆம் ஆண்டு திருக்கோவில் பிரதேசத்தில் இல்மனைற் அகழ்வுக்கான பணிகள் வெளிநாட்டு நிறுவனத்தால் முன்னெடுக்கப்பட்டபோது, மக்களின் எதிர்ப்பினால் அகழ்வுப் பணிகள் இடைநிறுத்தப்பட்டன.

மீண்டும் கடந்த வாரம் திருக்கோவில் தாண்டியடி கடற்கரையில் அரச துறைசார் அதிகாரிகள் கள விஜயம் மேற்கொண்ட நிலையில், இல்மனைற் அகழ்வுக்கு அரசு அனுமதி வழங்கக்கூடாது என்பதை வலியுறுத்தி மக்கள் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

# மரம் முறிந்து வீழ்ந்து 60 வயதுப் பெண் பலி!

கொழும்பு, செப் 07

நாட்டின் பல பகுதிகளில் தொடரும் சீரற்ற காலநிலை காரணமாக காலி உனவட்டுன பகுதியில் மரம் முறிந்து வீழ்ந்து ஒருவர் உயிரிழந்துள்ளார். 60 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

# தமிழ்க் கட்சிகளின் தலைவர்களே எம்மைப் பார்த்து ஒன்றுபடுங்கள்!

## வீடு, மீன், சைக்கிள் கட்சிகளின் இளைஞரணியினர் கூட்டாக கோரிக்கை




யாழ்ப்பாணம், செப் 07

**இளைஞர்களின் செயல்பாடுகளைப் பார்த்து தமிழ்க் கட்சிகளின் தலைவர்களும் தங்களுக்குள் ஒன்றுபடவேண்டும் என தமிழ் தேசிய கட்சிகளின் இளைஞர் அணியினர், தமது கட்சிகளின் மூத்த- வயதான தலைவர்களிடம் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளனர்.**

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட வாலிபர் முன்னணி தலைவர் க.பிருந்தாபன், செயலாளர் சேனாதிராசா கலையமுதன், தமிழ் மக்கள் கூட்டணியின் இளைஞர் அணித் தலைவர் கி.கிருஷ்ணமேனன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி-மணிவண்ணன் அணியின் உறுப்பினர் ஆகியோர் நேற்று யாழ்ப்பாணத்தில் கூட்டாக நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

தியாக தீபம் திலீபனின் நினைவுநாளை முன்னிட்டு இடம்பெறப்போகும் நடைபவனி குறித்து அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்றது.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட கிருஷ்ணமேனன் தெரிவிக்கையில்,

இளைஞர்களான எங்களுக்குள் எந்தவிதமான பிரிவினைகளும் முரண்பாடுகளும் இல்லை. அவ்வாறு இருந்தாலும் தாங்கள் தேசியத்துக்கான ஒரு விடயம் வரும்போது ஒற்றுமையான செயல்பாடுகளையே மேற்கொண்டு வந்துள்ளோம்.

இளைஞர்களாகிய எங்கள் செயல்பாடுகளைப் பார்த்து தலைவர்கள் தாங்களும் ஒன்றிணையவேண்டும். அவ்வாறு ஒன்றிணைந்தால்தான் இனப்பிரச்னைக்கான தீர்வையோ அல்லது ஏனைய விடயங்களையோ பேசமுடியும் என்ற ரீதியில் உணர்வாக இருந்தால் நிச்சயமாக அது சாத்தியமாகும்.

எதிர்காலத்தில் ஒரு ஒற்றுமையான பயணத்தை மேற்கொள்வதற்கு இது ஒரு ஆரம்பப் புள்ளியாக இருக்கும் எனத் தெரிவித்தார்.

தியாக திபம் திலீபனின் 33 ஆவது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு முள்ளிவாய்க்காலில் இருந்து நல்லூரில் அமைந்துள்ள திலீபனின் நினைவுத் தூபி வரை நடைபயணம் ஒன்று இடம்பெற இருக்கிறது.

இந்த நடைபயணம் தமிழர் தாயகப் பொது அமைப்புகள் மற்றும் தமிழ் அரசியல் கட்சிகளின் ஏற்பாட்டில் இடம்பெற இருக்கின்றது.

எதிர்வரும் 21 ஆம் திகதி முல்லைத்தீவு, முள்ளிவாய்க்காலில் அமைந்துள்ள நினைவுத் தூபியில் இருந்து ஆரம்பமாகும் இந்த நடைபவனி 26 ஆம் திகதி யாழ்ப்பாணம், நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தை அடையவுள்ளது.

இந்த நடைபவனியில் தாங்களும் கலந்துகொள்ளப் போவதாக இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் யாழ் மாவட்ட வாலிபர் முன்னணி தலைவர் க.பிருந்தாபன் மற்றும் தமிழ் மக்கள் கூட்டணியின் இளைஞர் அணித் தலைவர் கி.கிருஷ்ணமேனன், மணிவண்ணன் அணியினர் நேற்று தெரிவித்தனர்.

# ஜெனிவாவில் தமிழர் தரப்பு ஒன்றிணைந்து சர்வதேசத்துடன் பயணிப்பது கட்டாயமானது

## சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. வலியுறுத்தல்

முல்லைத்தீவு, செப் 07

ஐ.நா. கூட்டத்தொடரில் தமிழர் விவகாரத்தில் தமிழ் தரப்பினர் ஒன்றிணைந்து சர்வதேசத்துடன் பயணிக்கவேண்டிய கட்டாயத்தில் இருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களிடம் கருத்துரைத்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இப்போது மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் அரசு அமைக்கப்பட்டுள்ளது. அப்படி மூன்றிலிரண்டு பெரும்பான்மையை அமைத்த பொதுஜன பெரமுனவுடைய ஆட்சியில் தற்போதைய ஜனாதிபதியின் சகோதரர் பிரதமராக வந்துள்ளார்.

இந்த நேரத்தில் அவர்கள், ஜனநாயகத்துக்கு ஆபத்தான 20ஆவது திருத்தச்சட்டம் குறித்து முன்மொழிந்துள்ளார்கள். அது, ஒற்றையாட்சி அல்லது ஒரு குடும்ப ஆட்சியாக மாறுவதற்கு பிரதானமான காரணமாக அமையவுள்ளது. அந்த ஒற்றையாட்சியில்தான் தமிழர்கள் அழிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

ஒற்றையாட்சியின் முழு அதிகாரத்தையும் ஒரு குடும்பம் பெற்றுக்கொள்கின்ற முறையில் சரத்துக்கள் மாற்றப்பட்ட வர்த்தமானி பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எங்கள் மக்களுக்கு எதிராக நடத்தப்படுகின்ற எந்தவொரு செயற்பாட்டையும் நாங்கள் எதிர்ப்பதற்குத் தயாராகவே இருக்கின்றோம்.

அதேநேரத்தில், வரும் 2021ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. பேரவைக் கூட்டத்தில் இலங்கை தொடர்பான விடயத்தில் புலம்பெயர் உறவுகளுடன் இணைந்து தமிழர் தரப்பு அதனைக் கையாளவேண்டிய



தேவை ஏற்பட்டுள்ளது.

இதன்படி, அனைவரும் ஒன்றாக இணைந்து ஐ.நா. ஆணையாளரிடம் எமது பிரச்சினையை முன்வைக்க வேண்டும் என்பதுடன் உறுப்பு நாடுகளுடனும் நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து பேச்சில் ஈடுபடவேண்டும்-என்றார்.



# மின் கம்பத்துடன் கார் மோதி விபத்து

கொழும்பு, செப் 07

பேருவளை - காலி வீதியின் ஹெட்டிமுல்லை சந்தியில், நேற்று முன் தினம் நள்ளிரவு இடம்பெற்ற வாகன விபத்தில், காயமடைந்த நிலையில் தப்பிச்சென்ற சாரதி தொடர்பில் பேருவளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.


பேருவளையில் இருந்து அளுத்கமை நோக்கி, நள்ளிரவு 12.10 மணியளவில் அதிக வேகத்தில் பயணித்த கார் ஒன்று, ஹெட்டிமுல்லை சந்தியில் மின் கம்பத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தையடுத்து, சில மணி நேரம் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்த கார்ச் சாரதி மற்றும் அதில் பயணித்த மற்றைய நபர் ஆகியோர் விபத்தின்போது மதுபோதையில் இருந்துள்ளனர் என ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன்
சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் : திருதி கோகிலா மகேந்திரன்
உளவளத் துணையாளர்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன்
கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ
**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க
1.00 மணி : அறிந்தும் அறியாமலும்
( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
ஜீவா மற்றும் நிக்கி கல்ராணி நடிப்பில்
கீ



பிரபுதேவா மற்றும் நக்மா நடிப்பில்
காதலன்



திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : டேக் இட் ஈசி
5.00 மணி : டிக் டொக்
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : பத்துக்கு பத்து
6.30 மணி : நலம்தானா
**இரவு**
7.00 மணி : சொற்சமர்
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
9.30 மணி : நட்சத்திர கொமடி
10.00 மணி : யாவரும் கேளீர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
8.00 மணி : திரைப்படம்
சூர்யா மற்றும் தமன்னா நடிப்பில்
அயன்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
**இரவு**
7.00 மணி : ஓய்வெடு நிலவே
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி - தரம் 06 - தமிழ்
6.00 மணி - தரம் 07 - விஞ்ஞானம்
6.45 மணி - தரம் 08 - கணிதம்
7.30 மணி - தரம் 09 - தமிழ்
8.15 மணி - தரம் 10 - விஞ்ஞானம்
9.00 மணி - க.பொ.த உயர்தரம்
(கலைப்பிரிவு) தமிழ்
10.00 மணி - க.பொ.த உயர்தரம்
(வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி - க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) கணிதம்
**பகல்**
12.00 மணி - தரம் 10 - விஞ்ஞானம்
1.00 மணி - தரம் 09 - கணிதம்
2.00 மணி - தரம் 06 - ஆங்கிலம்
3.00 மணி - க.பொ.த சாதாரண தரம் தமிழ்
3.40 மணி - க.பொ.த சாதாரண தரம் கத்தோலிக்கம்
4.20 மணி - க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்
5.00 மணி - க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி - க.பொ.த சாதாரண தரம்
தகவல் தொழில்நுட்பம்
6.20 மணி - க.பொ.த சாதாரண தரம் வரலாறு
**இரவு**
7.00 மணி - க.பொ.த உயர்தரம்
வணிகக்கல்வி மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : சின்மய சிந்தனை
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா - 01
10.00 மணி : புதியதோர் தொடக்கம்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி :திரையில் பக்தி
12.30 மணி :திருவிழா - 02
6.00மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி :அருளுரை
7.30 மணி : திருவாசகம்
08.00 மணி : திருவிழா - 01

**காலை**
7.00 மணி - ஆலயப் பாடலகள்
8.00 மணி - ஜெபமாலை
9.00 மணி - மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி - திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி - குழந்தை யேசு மன்றாட்டு
11.30 மணி - ஜெபமாலை
**பகல்**
12.00 மணி - புனித அடைக்கல அன்னை
ஆலய நவநாள் திருப்பலி
1.00 மணி - மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி - திருகோணமலைத்திருப்பலி
3.00 மணி - பாடல்
4.30 மணி - திருகோணமலை திருப்பலி

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
12.00 மணி : லுகர் அதான்
**பகல்**
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிரைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.09.2020 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.